செ. வெ.எண் :112 நாள் :30.08.2022

# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவர்களின் விநாயகர் சதுர்த்தி வாழ்த்துச் செய்தி.

இந்த மங்களகரமான விநாயகர் சதுர்த்தி நன்னாளை முன்னிட்டு, தமிழ்நாடு மக்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விநாயகர் சதுர்த்தி திருநாளானது மெய்யறிவு, செழுமை மற்றும் நற்பேற்றின் உருவகமான விநாயகப் பெருமானின் பிறப்பைக் குறிக்கிறது. இறையருளால் நமது ஒருங்கிணைந்த மற்றும் தனிப்பட்ட இலக்குகளை நோக்கிய நமது அனைத்து முயற்சிகளும், செயல்களும் எவ்வித தடையுமின்றி வெற்றி பெறட்டும் .

நம்பிக்கையுடனும் உறுதியுடனும் கூடிய நமது புதிய தொடக்கங்களால், நம் நாடு அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தட்டும். இந்த மகத்தான திருநாள் அனைவருக்கும் அமைதி, நல்லிணக்கம், மகிழ்ச்சி மற்றும் செழிப்பை அளிக்கட்டும்.

“ அனைவருக்கும் எனது இனிய விநாயகர் சதுர்த்தி திருநாள் 2022 நல்வாழ்த்துக்கள் ”

---

ஆளுநர் மாளிகை,சென்னை - 22 ஒம் /-

நாள் : 30.08.2022 இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)